**GTVA/DEC/25**

Don't write anything in this space

தேர்வு : ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-தொகுதி–VA-எழுத்துத் தேர்வு

பாடம் : பொதுத் தமிழ் (பட்டப்படிப்புத் தரம்) [தாள் – I] (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 21.12.2025 மு.ப.

Booklet Serial No. :

Don't write anything in this space

தேர்வு : ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-தொகுதி–VA-எழுத்துத் தேர்வு

பாடம் : பொதுத் தமிழ் (பட்டப்படிப்புத் தரம்) [தாள் – I] (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 21.12.2025 மு.ப.

பதிவு எண் :

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி.

**சான்று**

நான் விண்ணப்பதாரரின் நுழைவுச்சீட்டில் உள்ள பதிவு எண், புகைப்படம் மற்றும் கையொப்பம் ஆகியவற்றினை சரிபார்த்த பின் இந்த வினா விடைத் தொகுப்பினை வழங்கினேன்.

அறைக்கண்காணிப்பாளரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

(தேர்வு முடிவுற்றவுடன் கையொப்பமிட வேண்டும்)

நான் இந்த வினா-விடைத் தொகுப்பில் பதிலளிக்காத விடைப் பகுதிகளை தேர்வு எழுதப் பயன்படுத்திய கருப்பு மை பேனா (மையூற்று பேனா அல்லது பந்துமுனை பேனா அல்லது ஜெல் பேனா)வினால் குறுக்குக் கோடிட்டுள்ளேன் என உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி.

TNPSC - SPECIMEN

Do not use this area

TNPSC - SPECIMEN
Do not use this area

# தாள் – I

# பொதுத் தமிழ்
## (விரிந்துரைக்கும் வகை)
## (பட்டப்படிப்புத் தரம்)

கால அளவு : மூன்று மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு 28 பக்கங்களைக் கொண்டுள்ளது)

**அறிவுரைகள்**

(கீழ்க்கண்ட அறிவுரைகளை தேர்வர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)

TNPSC - SPECIMEN

1. தேர்வர் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் 28 பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். வினா-விடைத்தாள் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், தேர்வர் அதனை தேர்வு தொடங்குவதற்கு முன்னதாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு முழுமையான வினா-விடைத்தாள் தொகுப்பினை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு குறைபாடு குறித்து முறையிட்டால், மாற்றித் தரப்படமாட்டாது.

2. (i) தேர்வர் ஒவ்வொரு வினாவிற்கும் விடை எழுதுவதற்கென வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.

   (ii) தேர்வர் வினாக்களுக்கு விடையளித்த பின்னர் மீதமுள்ள வெற்றிடங்களையும் விடையளிக்காத வினாவிற்கான வெற்றிடங்களையும் அனுமதிக்கப்பட்ட கருமை நிற மை பேனாவினால் குறுக்கு கோடிட்டு கண்டிப்பாக அடித்துவிட வேண்டும், அடித்த பகுதிகளில் கையொப்பம் இடக்கூடாது.

3. தேர்வர் விடையளிக்கும் போது தேவைப்படும் இடங்களில் வினா எண்ணையும், அதன் உட்பிரிவையும் தவறாமல் குறிப்பிட வேண்டும்.

4. தேர்வர் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

5. தேர்வர் இந்த வினா-விடைத்தாள் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.

6. தேர்வர் கடித வடிவிலான வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது தங்களது பெயரையோ, பதிவெண்ணையோ எழுதக்கூடாது. தங்களது பெயரில் கையொப்பமிடவும் அனுமதியில்லை. அவ்வாறான வினாக்களுக்கு பதிலளிக்கும்பொழுது வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே பயன்படுத்த வேண்டும்.

வினாக்களில் பெயர், முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லையெனில், 'அனுப்புநர்', 'பெறுநர்' முகவரிகளில் 'அ ஆ இ' அல்லது 'எக்ஸ் ஒய் இசட்' போன்ற பொதுப் பெயர்களை மட்டுமே எழுத வேண்டும்.

7. இத்தேர்வை பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காகவும், எழுத்துப்பிழையின்றி எழுதுவதற்காகவும் தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.

8. **<u>கீழ்க்கண்ட தவறுகள் கண்டறியப்பட்டால், விடைத்தாள் செல்லாததாக்கப்படும் :</u>**

   (i) வினா-விடைத்தாள் தொகுப்பில் கருமை நிற மை பேனாக்களைத் தவிர மற்ற நிற மை பேனாக்களை (Whitener, Sketch Pens, Pencil, வண்ணப் பென்சில்கள், வண்ண மைப்பேனா, Crayons, etc.,) உபயோகப்படுத்தினால்.

   (ii) தேர்வர்கள், தங்களது பதிவு எண்ணை இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் எந்த இடத்திலாவது எழுதினால்.

   (iii) வினா-விடைத்தாள் தொகுப்பில் எந்த ஒரு இடத்திலும் தொடர்பற்ற வகையில் பெயர் மற்றும் விவரங்களை மற்ற இடங்களில் எழுதுதல், மதக் குறியீட்டினை எழுதுதல் தேர்வரின் பெயர் எழுதுதல், கையொப்பம், தொலைபேசி எண், அலைபேசி எண் வேறு ஏதேனும் பெயர்களை எழுதுதல், சுருக்கொப்பம் அல்லது முகவரி ஆகிய பொருத்தமற்ற குறியீடுகளை இடுதல் (அ) எழுதுதல்.

   (iv) தேர்வர் தன்னுடைய தேர்ச்சி தொடர்பாக வினா-விடைத்தாள் தொகுப்பில் தேர்வாளரின் பரிவைத் தூண்டும் வகையில் எழுதுதல்.

   (v) தேர்வர் கேள்விக்கு தொடர்பில்லாத அல்லது தேர்வுக்கு சம்பந்தமில்லாத ஏதாவது கருத்துக்கள் மற்றும் பொருத்தமில்லாதவற்றை தனது அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் எழுதுதல்.

   (vi) குறிப்பிட்டு அனுமதிக்கப்பட்ட நிகழ்வுகளைத் தவிர, தேர்வர்கள் ஒருபகுதி ஆங்கிலத்திலும் மற்றொரு பகுதி தமிழிலும் விடை எழுதுவது. எனினும் மொழிபெயர்க்க இயலாத தொழில்நுட்ப வார்த்தைகள் (Technical words) அந்தந்த மொழியில் உள்ளவாறே எழுதலாம், மாறாக வாக்கியம் முழுவதும் / விடை முழுவதும் மொழி மாற்றி எழுதக் கூடாது.

   (vii) பிற தேர்வர்களின் இருக்கையில் தவறாக அமர்ந்து தேர்வு எழுதுதல் / பிற தேர்வர்களின் வினா விடைப்புத்தகத்தைப் பயன்படுத்துவது.

   (viii) வினா விடைப்புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ள பட்டைக் குறியீட்டினை சேதப்படுத்துதல்.

   (ix) முதன்மைத் தேர்விற்கான வினா விடைத்தாள் தொகுப்பின் முதல் பக்கத்தில் இதற்கென உள்ள இரண்டு இடங்களிலும் தேர்வர் கையொப்பமிடாத நேர்வுகளில்.

---

TNPSC - SPECIMEN

## அலகு — I

*குறிப்பு :* **i)** **பின்வரும் ஐந்து வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க வேண்டும்.**

**ii)** **கட்டுரை 300 சொற்களில் இருக்க வேண்டும்.**

**(1 × 10 = 10 மதிப்பெண்கள்)**

| | |
|---|---|
| வி.எண் 1 | இந்திய விடுதலைப் போரில் தமிழ்நாட்டு வீரர்களின் பங்கினை விவரிக்க. |
| வி.எண் 2 | இதழ்களின் உருவாக்கம் மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து ஒரு கட்டுரை எழுதுக. |
| வி.எண் 3 | சுற்றுச்சூழல் பயன்பாட்டின் அவசியம் குறித்து ஒரு கட்டுரை வரைக. |
| வி.எண் 4 | குழந்தைகளின் உரிமைகள் குறித்து கட்டுரை எழுதுக. |
| வி.எண் 5 | சமூக நீதி வரலாற்றில் திராவிட இயக்கத்தின் பங்களிப்பு குறித்து கட்டுரை வரைக. |

## அலகு — II

*குறிப்பு :* **i)** **பத்தியை நன்கு படித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**ii)** **ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு மதிப்பெண்கள்.**

**(5 × 2 = 10 மதிப்பெண்கள்)**

| | |
|---|---|
| வி.எண் 6 | சங்க காலத்தையும் நீதிநூல் காலத்தையும் அடுத்துத் தோன்றியது பக்தி இயக்கக் காலம் ஆகும். கி.பி. ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றிப் பக்திப் பாடல்களைப் பாடி சமயங்களைப் பரப்பி வந்தார்கள். "ஏழிசையாய் இசைப்பயனாய் உள்ளவன்" இறைவன் என்றார் சுந்தரர், "தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்" என்று திருநாவுக்கரசர் சொல்லியுள்ளார். ஆறாம் நூற்றாண்டில் காரைக்கால் அம்மையாரும் திருமூலரும் இயற்றிய பாடல்கள் உதவின. பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார் ஆகிய முதலாழ்வார் மூவரும் பாடிய பாசுரங்கள் அவ்வாறு உதவின. திருமூலர் மூவாயிரம் பாடல்கள் பாடியுள்ளார். திருமந்திரம் என்பது அவருடைய நூல், காரைக்கால் அம்மையார் பாடிய பக்திப் பாடல்கள் அற்புதத் திருவந்தாதி, இரட்டை மணிமாலை, மூத்த திருப்பதிகங்கள் என்று மூன்று நூல்களாக உள்ளன. |
| 1. | பக்தி இயக்கக் காலம் எப்போது தோன்றியது ? |

TNPSC - SPECIMEN

| | |
|---|---|
| 2. | சுந்தரர் இறைவனை எவ்வாறு காணுகிறார்? |
| 3. | முதலாழ்வார்கள் யாவர்? |
| 4. | திருமந்திரம் நூலின் பாடல்களின் எண்ணிக்கை யாது? |
| 5. | காரைக்காலம்மையாரின் படைப்புகள் எவை? |

## அலகு — III

*குறிப்பு :* **கொடுக்கப்பட்ட பகுதியை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

**(15 மதிப்பெண்கள்)**

| | |
|---|---|
| வி.எண் 7 | இசை கேட்டுப் பிணி அகல்வதாகப் பல நிகழ்ச்சிகள் பேசப்படுகின்றன. மகுடியில் பாம்பு மயங்கி ஆடுவதாகக் குறிப்பிடப்படுகின்றது. இனிய இசை கேட்டு உயிரினங்கள் இரை மறந்து நிற்பதாக உரைக்கப்படுகிறது. நற்பலனை மிகுதியாகப் பயிர்கள் தர நல்லிசை காட்ட வேண்டும் என்று சொல்லப்படுகின்றது. பிறந்த குழந்தை பாடல் கேட்டு மகிழ்கிறது. அமைதியுடன் தூங்குகிறது. இறக்கும் மனிதன் இன்னிசை கேட்க விரும்புகிறான். இறையுணர்வு பாடல்கள் அவன் மனதுக்கு இன்பத்தைக் கொடுத்து அவனுடைய உயிர் அமைதியுடன் அடங்கப் பண்ணுகிறது.<br><br>இசையால் விழாக்கள் சிறக்கின்றன. இன்பம் தருவதுடன் இசை வீர வேகத்தையும் தருகின்றது. வீர உணர்வுப் பாடல்கள் போராட்ட வீரர்களின் உணர்வைத் தட்டி எழுப்புகின்றன. விளையாட்டு வீரர்களும் இசையை விரும்புகின்றனர். இசைப் பல்வகையாக எழுந்து பல்வகை வினைப் பயன்களுக்கு ஊக்க உந்தாற்றலாக விளங்குகின்றது.<br><br>பழந்தமிழ் மக்கள் சுரங்களையும், சுருதிகளையும் இராகம் உண்டாக்கும் விதிகளையும் நன்கு உணர்ந்து பன்னிரண்டாயிரம் இராகங்களைப் பாடி வந்தார்கள் என்று பழந்தமிழ் இசை நூல்கள் கூறுகின்றது. அதே வழிமுறையில் பாடப்பட்டு வந்த இராகங்கள் பல இப்போது வேற்றுமொழிப் பெயர்களைச் சூடிக்கொண்டு உலா வருகின்றன. |

TNPSC - SPECIMEN

## அலகு — IV

*குறிப்பு :* **கொடுக்கப்பட்ட சுருக்கமான குறிப்புகளைக் கொண்டு விரிவாக எழுதுக.**

**(5 மதிப்பெண்கள்)**

| | |
|---|---|
| வி.எண் 8 | மொழி கருத்துப் பரிமாற்றக் கருவி – தமிழ் சைகைமொழியாக விளங்கி பேச்சு மொழியாகியது – தமிழ் எழுத்து (வரி வடிவம்) உருவாக்கப்பட்டு, இலக்கிய மொழியானது – தமிழ் கவிதை என்பது சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலாகும். |

## அலகு — V

*குறிப்பு :* கொடுக்கப்பட்ட ஆங்கில பத்தியை நன்குப் படித்து கருத்துச் சிதையாமல் தமிழில் மொழிபெயர்க்கவும்.

**(15 மதிப்பெண்கள்)**

| | |
|---|---|
| வி.எண் 9 | Dalhousie was contemplating changing the condition of women in the country. To that end he started many schools for women and his wife took personal interest in promoting women's education. The hindu widow remarriage Act was contemplated even in his days though the Act was passed actually in Cannings period. These changes for which the hindu female heart was waiting in vain for centuries now felt a gratitude which found mention even in the words of men.<br><br>Between 1875 and 1925 we have a number of Tamil Writers who were greatly interested in social reforms with special reference to the improvement in the states of women, in its various aspects, especially female education and widow remarriage. |

## அலகு — VI

*குறிப்பு :* i) கொடுக்கப்பட்ட மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்கவும்.

ii) **250** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**(1 × 15 = 15 மதிப்பெண்கள்)**

| | |
|---|---|
| வி.எண் 10 | உயர் கல்வி படிக்கும் மாணவர்களிடத்து எழுத்தாற்றல் பேச்சாற்றலை வளர்க்க மாவட்ட, மாநில அளவில் போட்டிகள் நடத்தி, அப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் தரவுகளைத் திரட்டி உயர்கல்வித்துறை ஆணையர் வழியாகத் தமிழ் வளர்ச்சித் துறைக்கு வழங்கக் கோரி ஓர் அலுவலகக் கடிதம் வரைக. |
| வி.எண் 11 | தமிழக அரசின் நிதியுதவியுடன் செயல்பட்டு வரும் பள்ளிகளில், நாட்டுநலப் பணித்திட்டத்தின் மேம்பாடுகளுக்குச் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து, திட்ட மதிப்பீட்டறிக்கையை உருவாக்கி (Project) பள்ளிக் கல்வித்துறை அமைச்சருக்கு வழங்குக. |
| வி.எண் 12 | புதிதாக உருவாக்கப்பட்ட கல்லூரியில் ஆய்வுக்கூட மேம்பாட்டிற்குத் தேவையான உபகரணங்கள் வழங்கக்கோரி, கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசிடம் கோரிக்கை வைப்பதற்கான கருத்துருக் கடிதம் எழுதுக. |

TNPSC - SPECIMEN

## அலகு — VII

*குறிப்பு :*

**i)** பின்வரும் ஐந்து பிரிவுகளில், ஒவ்வொரு பிரிவிலும் ஐந்து வினாக்கள் உள்ளன.

**ii)** ஒவ்வொரு பிரிவிலும் உள்ள ஐந்து வினாக்களில் எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**iii)** ஒவ்வொரு பிரிவிற்கும் ஆறு மதிப்பெண்கள் **($3 \times 2 = 6$).**

**iv)** ஐந்து பிரிவுகளுக்கும் சேர்த்து முப்பது மதிப்பெண்கள் **($5 \times 6 = 30$).**

| | |
|---|---|
| வி.எண் 13 | **வாக்கியத்தில் அமைத்து எழுதுக.**<br>**எவையேனும் மூன்று வினாக்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றினை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.** |
| (1) | மெல்ல தமிழ் |
| (2) | எண்ணியெண்ணி |
| (3) | நனிச்சிறந்தது |
| (4) | பேரிடர் |
| (5) | பொருட்படுத்தாமல் |
| வி.எண் 14 | **இணைச் சொற்களைப் பயன்படுத்தித் தொடர் அமைத்தல்.**<br>**பின்வரும் இணைச் சொற்களில் மூன்றினுக்குத் தொடர் அமைக்க.** |
| (1) | கையும் களவும் |
| (2) | கண்ணீரும் கம்பலையும் |
| (3) | ஆற அமர |
| (4) | அல்லும் பகலும் |
| (5) | ஏறத்தாழ |
| வி.எண் 15 | **அகர வரிசைப்படுத்துதல்.**<br>**எவையேனும் மூன்று வினாக்களைத் தேர்ந்தெடுத்து அகர வரிசைப்படுத்துக.** |
| (1) | அடகு, அடியவர், அகம்மலிந்து, அகப்பட்டி |
| (2) | ஈசன், ஆதவன், இனியவன், அன்பன் |

TNPSC - SPECIMEN

| | |
|---|---|
| (3) | பதாகை, பதவி, பதுமை, பதிகம் |
| (4) | செப்பம், குறுங்கண், தையலார், திறப்பாடு |
| (5) | அதியமான், பிசிராந்தையார், கோப்பெருஞ்சோழன், ஔவையார் |
| வி.எண் 16 | **பிழைநீக்கி எழுதுதல்.**<br>**எவையேனும் மூன்று தொடர்களில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.** |
| (1) | தேங்காய் எண்ணெய் ஊற்றிக் கரிக்குளம்பு சமைத்த பாட்டி எண்ணைத் தேடி வந்தார்கள். |
| (2) | முல்லைக்கு தேர்கொடுத்த பாரியை தேடிச் சென்றேன். |
| (3) | பறவை பறந்தன; மலர்கள் மலர்ந்தன; கனவுகள் பிறந்தது. |
| (4) | அங்கு சென்று அவரை காண்பாயா? |
| (5) | பூனை தன் குழந்தையைத் தூக்கிச் சென்றது. |
| வி.எண் 17 | **கலைச்சொல்லாக்கம் தருக.**<br>**எவையேனும் மூன்று சொற்களுக்குத் துறைசார் ஆட்சித் தமிழ் கலைச்சொல்லாக்கம் தருக.** |
| (1) | Upgrade |
| (2) | Union Public Service Commission |
| (3) | Stay Order |
| (4) | Review Petition |
| (5) | Regional Office |

TNPSC - SPECIMEN